பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

08 03 2025 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதள பக்கங்களை நிர்வகிக்கும் பொறுப்பினை இன்று பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களுக்கு வழங்கியுள்ளார்.
- விவசாயம் தொடங்கி, தொழில் முனைவோர்கள் வரை நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- இருவேறு நபர்களுக்கு ஒரே வாக்காளர் அடையாள அட்டை எண் வழங்கப்பட்டுள்ள பிரச்சினைக்கு மூன்று மாதத்திற்குள் தீர்வுகாணப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
- ரஷ்யாவுக்கு எதிராக கூடுதல் பொருளாதார தடைகளை விதிப்பது குறித்து பரிசீலித்து வருவதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.
- ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<<>>>>>**

சர்வதேச மகளிர் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதள பக்கங்களை நிர்வகிக்கும் பொறுப்பினை பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களுக்கு வழங்கியுள்ளார்.

கடந்த மாதம் ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட பிரதமர் தற்போது அதனை செயல்படுத்தியுள்ளார்.

<u>*(சவுண்ட் பைட் - மோடி – 47 செகண்ட்ஸ்)*</u>

பிரதமரின் சமூகவலைதளப் பக்கத்தை நிர்வகிக்கும் வாய்ப்பு தமக்கு கிடைத்துள்ளது பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று செஸ் போட்டிகளில் சாதனை படைத்த தமிழகத்தின் சென்னையை சேர்ந்த வைஷாலி கூறியுள்ளார்.

செஸ் போட்டிகளுக்கான தரவரிசை பட்டியலில் மேலும் முன்னேற வேண்டும் என்பதே தமது விருப்பம் என்றும், பெண்கள் விளையாட்டுத்துறையில் கூடுதலாக பங்கேற்க வேண்டும் என்றும் வைசாலி கேட்டுக் கொண்டுள்ளார்.

அணு விஞ்ஞானி எலினா மிஸ்ரா மற்றும் விண்வெளி ஆராய்ச்சியாளர் **Shilpi Sony**-யும் பிரதமர் வலைதளப் பக்கங்களை நிர்வகிக்கும் வாய்ப்பினை பெற்றுள்ளனர்.

இந்த வாய்ப்பு தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக கூறியுள்ள அவர்கள், ஆராய்ச்சிப் பணிகளில் பெண்கள் கூடுதலாக ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பீகாரை சேர்ந்த விவசாயி மற்றும் தொழில் முனைவோரான திருமதி அனிதா தேவியும் இந்த வாய்ப்பு கிடைத்தது பெரும் மகிழ்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

தமது வாழ்க்கை பயணம் குறித்தும், படைத்த சாதனைகள் குறித்தும் திருமதி அனிதா தேவி விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

கடின உழைப்பினால் எந்த சாதனையையும் எட்ட இயலும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, விடுத்துள்ள செய்தியில், மகளிர் உரிமை, சமத்துவம் மற்றும் மேம்பாட்டிற்காக அனைவரும் பாடுபட உறுதியேற்றுக்கொள்வோம் என்று கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பெண்கள் பல்வேறு தடைகளை கடந்து, அனைத்துத்துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு மகளிர் தலைமையிலான மேம்பாடு அவசியமாகிறது என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறியுள்ளார்.

மாநிலங்களின் ஆளுநர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்நாளையொட்டி வாழ்த்து செய்தி விடுத்துள்ளனர்.

அன்னையாக, சகோதரிகளாக, நண்பர்களாக பல்வேறு பரிமாணங்கள் கொண்டு வாழ்கின்ற பெண்கள், விவசாயம் தொடங்கி, தொழில் முனைவோர்கள் வரை நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்களித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பின்னர் கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 69 செகண்ட்ஸ்)*

மகளிர் தினத்தையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

புதுதில்லி ஆகாஷ்வாணி செய்திப்பிரிவு இன்று நாள் முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படுகிறது.

செய்தியை உருவாக்குவதிலிருந்து, ஒலிபரப்பாகும் வரை அனைத்துப்பணிகளையும் பெண்களே மேற்கொள்கின்றனர்.

தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 100 பெண்களுக்கு பிங்க் ஆட்டோக்களை வழங்கி அவற்றின் சேவையை தொடங்கிவைத்தார்.

**<<<<<<<>>>>>**

இருவேறு நபர்களுக்கு ஒரே வாக்காளர் அடையாள அட்டை எண் வழங்கப்பட்டுள்ள பிரச்சினைக்கு மூன்று மாதத்திற்குள் தீர்வுகாணப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இத்தகைய எண் கொண்டவர்களுக்கு தனித்துவ எண் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

முதல்கட்ட ஆய்வின்படி நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒரே அடையாள அட்டை எண் கொண்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருமாநிலங்களை சேர்ந்த வெவ்வேறு வாக்காளர்கள் இதுபோன்ற எண்ணை கொண்டிருப்பதால் அவற்றை களையும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>

நாடு முழுவதும் கடந்த மாதம் ஆதார் எண் அடிப்படையில் 225 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

வாடிக்கையாளர்களின் விவரங்களை அறிந்துகொள்வதற்காக 43 கோடி பரிவர்த்தனைகள் நடைபெற்றிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுவரை 14 ஆயிரம் கோடி பரிவர்த்தனைகள் நடைபெற்றிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

மணிப்பூரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் 114 ஆயுதங்களும், வெடிபொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாநிலம் முழுவதும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் நவீன நகர திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை ஜப்பான் குழுவினர் ஆய்வு செய்தனர்.

ஜப்பான் – இந்தியா நவீன நகர கூட்டுறவு அமைப்பின்கீழ், தானேவில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை இக்குழுவினர் ஆய்வு செய்தனர்.

இந்த திட்டத்தின்கீழ், 32 பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், மூன்று பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இப்பணிகளை ஜப்பான் குழுவினர் காணொலி வாயிலாகவும், நேரடியாகவும் அடிக்கடி ஆய்வு மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<<>>>>>

ரஷ்யா மீது கூடுதல் பொருளாதார தடைகளை விதிப்பது குறித்து பரிசீலித்து வருவதாக அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

உக்ரைனுடன் அமைதிக்கான உடன்பாடு மற்றும் சண்டைநிறுத்த ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றால், இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா தாக்குதலை தொடர்ந்து நடத்திவருவதையடுத்து, இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஈரானின் டெஹ்ரானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா, 56-18 என்ற புள்ளிக்கணக்கில் நேபாளத்தை வென்றது.

இறுதிப்போட்டியில் இந்தியா - ஈரானை எதிர்கொள்கிறது.

<<<<<<<>>>>>

**Prague** செஸ் போட்டியில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் பட்டம் வென்றார்.

செக் குடியரசில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிச்சுற்றில் அரவிந்த் சிதம்பரம் மற்றும் துருக்கியின் **Ediz Gurel** இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

இருப்பினும், கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் அரவிந்த் சிதம்பரம் பட்டம் வென்றார்.

<<<<<<<>>>>>

**Kigali** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Siddhant Banthia –** பல்கேரியாவின் **Alexander Donski** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-3 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Olukayode Alafia Damina Ayeni –** பிரான்சின் **Luka Pavlovic** இணையை வென்றது.

**<<<<<<<>>>>>**